**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**<u>O.S. NO</u>**<u>. 355/2022</u>

**வா.சா.** 1

**திருமதி. சாய்பிரியங்கா, த/பெ. ஆனந்தன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 2, 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

கோபிசெட்டிபாளையத்திற்கு நான் வந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் எனது பெற்றோர் ஊர் கோபிசெட்டிபாளையம், திருமணத்திற்கு பின்னிட்டு நான் தற்போது தான் கோபிசெட்டிபாளையம் வந்திருக்கிறேன். எத்தனை சொத்துக்கள் குறித்து பாகம் கேட்டுள்ளேன் என்றால் 28 சொத்துக்கள். 27 சொத்துக்கள் பொறுத்து நான்கு எல்லைகள் தெரியாது என்றால் சரிதான். பாரியூர் கிராமம், அக்ரஹார கரை கிராமம், வீரபாண்டி கிராமம், பழைய பாரியூர் கிராமம் இவை எல்லாம் எனக்கு எங்கிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரிகளை சந்தித்து சொத்துக்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களுக்கு பாத்தியப்பட்ட கூட்டு பங்குதாரர்கள் மற்றும் கூட்டு பட்டாதாரர்களின் விபரங்களை கி.நி.அதிகாரி மற்றும் வருவாய் அலுவலர்களிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் M.Com., படித்துள்ளேன். B.Com. மற்றும் M.Com. PKR கலைக்கல்லூரியில் படித்தேன். நான் வழக்குரையில் சொல்லியவாறே தாவா சொத்துக்களுக்குண்டான ஆவணங்களை இன்றைய தேதிவரை தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணங்கள் என்னிடம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சொத்துக்களுக்குண்டான ஆவணங்களை பெற்று வழக்கை உரிய முறையில் தாக்கல் செய்யாமல் ஆவணங்கள் ஏதும் இல்லாமல் வழக்கு

தாக்கல் செய்யவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்றால் ஆவணங்களை பிரதிவாதிகளிடம்நேரில் கேட்டேன் அவர்கள் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள் அதனால் தாக்கல் செய்தேன். எந்த தேதி, மாதம், வருடத்தில் எந்த பிரதிவாதியிடம் அவ்வாறு கேட்டதாக சொல்கிறேன் என்றால் டிசம்பர் 2021 ம் வருடம் 2 வது வாரத்தில் 2 ம் பிரதிவாதி பச்சியம்மாளிடம் கேட்டேன். 1 ம் பிரதிவாதி என்னுடைய தாயார். என்னுடைய தாயாரை எதனால் 1 ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் இருவரிடமும் ஆவணங்களை கேட்டேன் அவர்கள் ஒன்றாக சேர்ந்துகொண்டு பாகப்பிரிவினை செய்து தரமுடியாது என்று கூறினார். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் என் தாயாரிடம் பாகம் கேட்டு அவர் தரமுடியாது என்று சொன்னதாக நான் சொல்லியுள்ளேனோ என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு என் தாயார் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தாயாருக்கும், எனக்கும் விரோதம் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் தாயார் பவானி குப்பாண்டாம்பாளையத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். நானும், எனது கணவரும் எப்போதிலிருந்து என்னுடைய தாயார் வீட்டிற்கு செல்வதில்லை என்றால் திருமணத்திற்கு பின்னிட்டு செல்வதில்லை. எனது தாயாரிடம் சொத்துக்களில் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் நேரில் தான் கேட்டேன் அறிவிப்பு கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் வழக்குரையில் என் தாயார் என் சார்பாக கோபிசெட்டிபாளையம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 54/2007 என்ற வழக்கு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்துள்ள விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் மேற்படி விபரம் தெரியவந்தது. என் தாயார் எத்தனை சொத்துக்களுக்கு யாருக்கு எதிராக மேற்படி வழக்கை தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. நான் இந்த வழக்குரையை படித்து பார்த்த பிறகு தான் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். மேற்படி வழக்கு வழக்கறிஞர்கள் மற்றும் தரப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்தியதன்பேரில் இருதரப்பில் சமாதானமாகி முடித்துவைக்கப்பட்டது என்றால் தற்போதுதான் அதைப்பற்றி

தெரிந்துகொண்டேன். என் திருமணத்திற்கு முன்பாக எனக்கும், என் தாயாருக்கும் பிரச்சனை ஏதுவுமில்லை என்றால் சரிதான். என் தாயார் என்னை ஏமாற்றி மேற்படி வழக்கில் பைசல் செய்துவிட்டார் என்பதால் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு பிரதிவாதி தரப்பில் பதில் தாக்கல் செய்த பிறகு தான் மேற்படி வழக்கு பைசலானது எனக்கு தெரியவந்தது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் என் தாயார் என்னை ஏமாற்றி வழக்கை பைசல் செய்துகொண்டதாக சொல்லவில்லை என்றால் இந்த வழக்கை பிரதிவாதி தரப்பில் பதில் தாக்கல் செய்த பிறகுதான் மேற்படி விபரம் தெரியவந்தது. எனது திருமணத்தை எனது தாயார் தான் நல்லபடியாக நடத்திவைத்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பாக நான் வெளி வேலைக்கு எதுவும் செல்லவில்லை என்றால் சரிதான். என் தாயாருக்கு எனது திருமணத்தை நடத்தும் அளவுக்கு பணம் எவ்வாறு வந்தது என்றால் எனது உறவினர்கள் தான் திருமண செலவுகளை செய்து திருமணத்தை நடத்திக்கொடுத்தார்கள். அவ்வாறு திருமணசெலவுகள் செய்ததாக கூறும் உறவினர்களின் பெயர்களை நான் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் தாயார் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் பணம் பெற்றுக்கொண்டு அவர் தாக்கல் செய்த வழக்கை சமாதானம் செய்துகொண்ட விபரம் தற்போது தான் எனக்கு தெரியவந்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். அவ்வாறு வங்கியிலிருந்து பெற்ற ரூ.7,00,000/- என்ன செய்தீர்கள் என்று என் தாயாரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன், அதற்கு அவர் மேற்படி தொகை அவரது செலவுக்கு சரியாகிவிட்டதாக சொன்னார். எனது படிப்புக்குண்டான செலவுகளை யார் மேற்கொண்டது என்றால் என்னுடைய உறவினர்கள் தான். மேற்படி விபரங்களையும் நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளது என்னுடைய தாயாருக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்ல செய்தபிறகு நானோ, என்னுடைய கணவரோ சொத்துக்கள் எங்கெங்குள்ளது என்று போய் பார்த்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் எனது பிறப்பு சான்று, பள்ளி படிப்பு சான்றிதழ் மற்றும் திருமண சான்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் எந்த தேதியில் பிறந்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் 26-06-1997. வழக்கில் நான் வழக்கு சொத்துக்களை ¼ பாகத்தை கேட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த அடிப்படையில் அவ்வாறு பாகம் கேட்கிறேன் என்றால் பச்சையம்மாளுக்கு ஒரு பங்கும், என் அப்பாவுக்கு பாத்தியப்பட்ட ஒரு பங்கு சொத்தில் எனக்கும் ஒரு பங்கு, என் தாயாருக்கும் ஒரு பங்கு. சாட்சி தற்போது என் அத்தை பச்சியம்மாளுக்கு ½ பங்கும், என் தகப்பனாருக்கு ½ பங்கும் என்று கூறுகிறார். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களுக்குண்டான பட்டாக்கள் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்துக்களுக்குண்டான சிட்டா, அடங்கல், ஆர்எஸ்ஆர் மற்றும் புல வரைபடம் நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கூட்டுப்பட்டாதாரர்கள் எத்தனை நபர்கள் வருகிறார்கள் என்றால் தெரியாது. என்னுடைய தாயார் எனக்காக பணத்தை வாங்கி அதனை பயன்படுத்தி எனது படிப்பை செலவையும், எனது திருமண செலவையும் செய்தார் என்றால் இல்லை. முழு வயது பூர்த்தியடைந்து எத்தனை வருடத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2015 ம் வருடம் நான் முழு வயதை அடைந்துவிட்டேன் என்றும், 2018 ம் ஆண்டுவாக்கில் வழக்கு தாக்கல் செய்யும் உரிமையை நான் இழந்துவிட்டேன் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**